**டிசம்பர் – 09**

# TNPSC துளிகள்

- ஃபினோ பேமெண்ட்ஸ் வங்கி லிமிடெட் நிறுவனமானது, ஒரு சிறு நிதி வங்கியாக (SFB) மாறுவதற்கான முதன்மை ஒப்புதலை இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்றுள்ளது.
    - இது ஒரு சிறு நிதி வங்கியாக மாற்றப்படும் முதல் கட்டண வங்கியாகும்.
- கூகுள் நிறுவனமானது AI அல்ட்ரா சந்தாதாரர்களுக்காக, ஒரே நேரத்தில் பல கருதுகோள்களை ஆராய்வதற்காக மேம்பட்ட இணையான பகுத்தறிவைப் பயன்படுத்துகின்ற ஜெமினி 3 டீப் திங் மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- உலகளாவிய அமைதி மற்றும் ஒற்றுமையை ஊக்குவிப்பதற்காக வாஷிங்டனில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியில் அதிபர் டொனால்ட் டிரம்ப் FIFA கூட்டமைப்பின் முதல் அமைதி பரிசைப் பெற்றார்.
- இந்தியா-மலேசியா இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியான ஐந்தாவது ஹரிமாவ் சக்தி 2025 பயிற்சி இராஜஸ்தானில் தொடங்கியது.
- கிராண்ட்ஸ்லாம் ஆஃப் டார்ட்ஸ் இறுதிப் போட்டியில் வென்றதையடுத்து, தனது 18வது வயதில் டார்ட்ஸ் (எறிமுட்கோல்கள்) போட்டியில் உலகின் முன்னணி இடத்தினைப் பிடித்த இளம் வீரர் என்றப் பெருமையை லூக் லிட்லர் பெற்றுள்ளார்.
- சர்வதேசப் பெரும் பூனை இனங்கள் கூட்டணியின் (IBCA) 19வது உறுப்பினராக ரஷ்யா இணைந்துள்ளது.
- இந்திய அரசானது, 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ரஷ்யக் குடிமக்களுக்கு 30 நாட்கள் அளவிலான இலவச ஒற்றை-நுழைவு இணையச் சுற்றுலா மற்றும் குழு நுழைவு இசைவுச் சீட்டுக்களை வழங்க உள்ளது.
- டேவிட் பார்னியாவுக்குப் பிறகு, இஸ்ரேலின் வெளிநாட்டு உளவுத்துறை நிறுவனமான மொசாட்டின் புதிய தலைவராக ரோமன் கோஃப்மேன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- டெல்லி-மும்பை மற்றும் டெல்லி-ஹவுரா வழித்தடங்களை உள்ளடக்கிய 738 கி.மீ. தூரப் பாதையில், பாதுகாப்பு நம்பகத் தன்மை நிலை-4 (SIL-4) சான்றளிக்கப்பட்ட மேம்படுத்தப் பட்ட கவாச் 4.0 தானியங்கி இரயில் பாதுகாப்பு அமைப்பை இந்திய இரயில்வே நிறுவி இயக்கியுள்ளது.
    - இந்த அமைப்பில் பாதையில் பொருத்தப்பட்ட பாதுகாப்பு அலகுகள், இரயிலில் உள்ள சாதனங்கள், ஒளியிழை கம்பி வடங்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் அருகமைவு தரவு மையங்கள் ஆகிய ஐந்து துணை அமைப்புகள் உள்ளன.
- இந்தியாவின் கைவினைஞர்கள் மற்றும் கைவினை மரபுகளைக் கொண்டாடச் செய்வதற்காக ஆண்டுதோறும் டிசம்பர் 8 முதல் 14 ஆம் தேதி வரையில் தேசிய கை வினைப் பொருட்கள் வாரம் அனுசரிக்கப்படுகிறது.
- மின்காந்த/நுண்ணலை அடுப்பு அடுப்பின் கண்டுபிடிப்பு மற்றும் பயனைக் கொண்டாடுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 06 ஆம் தேதியன்று தேசிய நுண்ணலை அடுப்பு (மைக்ரோவேவ்) தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் இந்தியாவின் முதல் பசுமை இழுவைப் படகு

- பசுமை இழுவைப் படகிற்கான மாற்றத் திட்டத்தின் (GTTP) கீழ், தீன்தயாள் துறைமுக

ஆணையத்திற்காக (DPA) முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் தனது முதல் பசுமை இழுவைப் படகு ஒன்றை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது.

- அமைதியான செயல்பாடுகள், சுழிய அளவிலான கார்பன் உமிழ்வு மற்றும் 60 டன் பொல்லார்டு இழுவை திறன் கொண்ட துறைமுகப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் இந்த இழுவைப் படகு வடிவமைக்கப் பட்டுள்ளது.
- GTTP ஆனது, முதல் கட்டத்தில் (2024–2027) 16 இழுவைப் படகுகளுடன், 2030 ஆம் ஆண்டிற்குள் 50 பசுமை இழுவைப் படகுகளை சேர்க்கத் திட்டமிட்டுள்ளது.
- DPA, பாரதீப் துறைமுக ஆணையம், ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையம் மற்றும் V.O. சிதம்பரனார் துறைமுக ஆணையம் ஆகியவை முதல் கட்டத்தில் தலா இரண்டு இழுவைப் படகுகளைப் பெறுகின்றன.
- எதிர்காலப் பசுமை திட்டங்களுக்கான தரவை வழங்கும் அதே வேளையில், படைத் துறை நடவடிக்கைகள், பாதுகாப்பு மற்றும் அவசரகாலப் பணிகளில் இந்த இழுவைப் படகு உதவும்.




## இந்தியக் கடல்சார் கோட்பாடு 2025



- இந்தியக் கடற்படை ஆனது கடற்படை தினத்தன்று (டிசம்பர் 04) 2025 ஆம் ஆண்டு இந்தியக் கடல்சார் கோட்பாட்டினை வெளியிட்டது.
- இந்தக் கோட்பாடு ஆனது கடற்படையின் மூலோபாயம், படைகளின் பயன்பாடு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான முதன்மையான வழிகாட்டுதல் ஆவணமாகும்.
- இது "no-war, no-peace" என்ற வகையை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்து, முப்படைகளுக்கு இடையேயான கூட்டு நடவடிக்கைகளை வலியுறுத்துகிறது.
- இது இடை மண்டலம், கலப்பின, விண்வெளி, இணைய வெளி மற்றும் அறிவாற்றல் சார்ந்த போர் போன்ற புதிய அச்சுறுத்தல் பகுதிகளை எடுத்துக்காட்டுகிறது.
- இந்தக் கோட்பாடு தன்னாட்சி மற்றும் பணியாளர்கள் இல்லாத அமைப்புகள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கிறது.

## பொருளாதாரக் கூட்டுறவுத் திட்டம் 2030




- இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் வர்த்தகம் மற்றும் உத்தி சார் உறவுகளை அதிகரிப்பதற்காக 2030 ஆம் ஆண்டு வரையிலான பொருளாதாரக் கூட்டுறவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- இந்தத் திட்டமானது எரிசக்தி, பாதுகாப்புத் துறை, தொழில்நுட்பம் மற்றும் தொழில் துறை கூட்டுறவில் கவனம் செலுத்துகிறது.
- இரு நாடுகளும் வருடாந்திர இருதரப்பு வர்த்தக அளவை 100 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளன.
- சர்வதேச வடக்கு-தெற்குப் போக்குவரத்து வழித்தடம் மற்றும் ஆர்டிக் கப்பல் போக்குவரத்துப் பாதைகள் போன்ற போக்குவரத்து வழித்தடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படுகின்றன.
- இந்தக் கூட்டுறவில் அணுசக்தி, சிறிய அணு உலைகள், மிதக்கும் அணுமின் நிலையங்கள் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்பு ஆகியவை அடங்கும்.
- இந்தத் திட்டம் ஆனது பாதுகாப்பு துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, கூட்டு உற்பத்தி, விண்வெளி ஒத்துழைப்பு, தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் திறமையான பணியாளர் இயங்குந் தன்மை ஆகியவற்றையும் உள்ளடக்கியது.

## இந்தியா-ரஷ்யா உச்சி மாநாடு 2025




- ❖ 23வது இந்தியா-ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாடு ஆனது புது டெல்லியில் நடத்தப் பட்டது.
- ❖ இந்த உச்சி மாநாடு ஆனது உத்தி சார் கூட்டாண்மைப் பிரகடனத்தின் (2000) 25வது ஆண்டு நிறைவைக் குறித்தது.
- ❖ இந்தக் கூட்டாண்மை 2010 ஆம் ஆண்டில் "சிறப்பு மற்றும் சலுகை பெற்ற உத்தி சார் கூட்டாண்மை"யாக மேம்படுத்தப்பட்டது.
- ❖ எரிசக்தி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கும் அப்பால் வர்த்தகத்தை பல்வகைப் படுத்துவதற்கு அந்நாடுகளின் தலைவர்கள் 2030 ஆம் ஆண்டு பொருளாதாரத் திட்டத்தினை ஏற்றுக் கொண்டனர்.
- ❖ இருதரப்பு வர்த்தக இலக்குகள் ஆனது 2024–25 ஆம் ஆண்டில் 68.7 பில்லியன் டாலரில் இருந்து 2030 ஆம் ஆண்டிற்குள் 100 பில்லியன் டாலராக நிர்ணயிக்கப் பட்டது.
- ❖ ஒப்பந்தங்களில் யூரேசிய பொருளாதார ஒன்றியத்துடனான விரைவான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (FTA), எரிசக்தி ஒத்துழைப்பு, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, இணைப்புத் திட்டங்கள், ஆர்டிக் ஒத்துழைப்பு மற்றும் ரஷ்யக் குடி மக்களுக்கான 30 நாட்கள் அளவிலான நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத இணைய வழிச் சுற்றுலா நுழைவு ஆகியவை அடங்கும்.


# பொருளாதாரச் செய்திகள்

## பொருளாதாரக் கணக்கெடுப்பு 2027

- ❖ 2026–27 ஆம் ஆண்டு இரண்டு கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகு, இந்தியா தனது 8வது பொருளாதாரக் கணக்கெடுப்பை (EC) 2027 ஆம் ஆண்டில் நடத்த உள்ளது.
- ❖ பொருளாதாரக் கணக்கெடுப்பு ஆனது சரக்குகள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதில் அல்லது விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களையும் கணக்கிடுகிறது.
- ❖ பொருளாதாரக் கணக்கெடுப்பு, மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச பொருளாதாரம் மற்றும் புள்ளி விவர இயக்குநரகங்களுடன் இணைந்து புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் (MOSPI) நடத்தப்படுகிறது.
- ❖ 8வது பொருளாதாரக் கணக்கெடுப்பின் தரவு, நிறுவனங்களின் ஒருங்கிணைந்த


தரவுத் தளமான புள்ளிவிவர வணிகப் பதிவேட்டை (SBR) உருவாக்கப் பயன்படுத்தப் படும்.

- துல்லியமான பொருளாதார புள்ளி விவரங்களுக்காக செயலில் உள்ள மற்றும் மூடப் பட்ட நிறுவனங்களை அடையாளம் காண SBR உதவும்.
- 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆனது, 1948 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டத்தின் கீழ் நடத்தப்படும் இந்தியாவின் 16வது பத்தாண்டுக் கணக்கெடுப்பாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஏர்-சோல் மோயென் போர்டீ-ரெனோவ் எறிகணை




- ஏர்-சோல் மோயென் போர்டீ-ரெனோவ் (ASMPA-R) என்பது பிரான்சின் நடுத்தரத் தூர தாக்குதல் வரம்புடைய, மீயொலி, அணுசக்தி ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட ASMP சீர்வேக எறிகணை குழுவின் புதிய வடிவமாகும்.
- இது பிரான்சு நாட்டினால் அதன் அணுசக்தி மும்மை வடிவின் (நிலம், கடல், வான்) வான் வழி அடிப்படையிலான கூறுக்காக உருவாக்கப்பட்டது.
- இந்த எறிகணை இரட்டைக் காற்று உள்ளிழுப்பு அமைப்புகளைக் கொண்ட, மேக் 3 வேகத்தில் நிலையாக இயங்கும் மீயொலி வேகத்திலான இயக்கத்தினைச் செயல் படுத்துகின்ற ஒரு ராம்ஜெட் இயந்திரத்தைப் பயன்படுத்துகிறது.
- ASMPA-R ஆனது தோராயமாக 600 கிலோமீட்டர் இயக்க வரம்பைக் கொண்டுள்ளது.

- இது 100 கிலோ டன்கள் முதல் 300 கிலோ டன்கள் வரையிலான சமனீடு செய்யக் கூடிய வெளியீட்டு அமைப்புகளுடன் வான்வழி அணு ஆயுதத்தைச் சுமந்து செல்கிறது.

## KYC-அடிப்படையிலான அழைப்பாளர் அடையாளம்




- தொலைத்தொடர்புத் துறை (DoT) ஆனது அனைத்து உள்வரும் அழைப்புகளுக்கும் KYC (உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்) பதிவு செய்யப்பட்ட பெயரைக் காட்டுமாறு தொலைத்தொடர்பு சேவை வழங்கீட்டு நிறுவனங்களைக் கோர உள்ளது.
- அழைப்பாளர் பெயர் வெளியீடு (CNAP) எனப்படும் இந்த அம்சமானது ஹரியானாவில் பரிசோதிக்கப்படுகிறது.
- CNAP, "சந்தேகிக்கப்பட்ட" அல்லது "சந்தேகத்திற்குரியது" என்று அழைப்புகளைக் குறிக்கும் அதே அமைப்பைப் பயன்படுத்துகிறது.
- பயனர்கள் அழைப்பாளர்களை அடையாளம் காண உதவுவதன் மூலம் தேவையற்ற மற்றும் மோசடி அழைப்புகளைக் குறைப்பதை இந்த நடவடிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- DoT ஆனது அங்கீகரிக்கப்பட்ட பயனர்களுக்கு CLIR (அழைப்பாளர் தகவல் அடையாளக் கட்டுப்பாடு) மூலம் மட்டுமே அடையாள மறைப்பு அனுமதிக்கப்படுவதுடன், இயல்பாகவே CNAP அம்சத்தினை இயக்கும்.
- இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) ஆனது இதன் அமலாக்கத்திற்கான பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சோனெராட்ஸ் மூஞ்சூறு

- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று, உதகமண்டலத்தில் உள்ள ஊட்டி ஏரி அருகே இறந்த ஒரு மூஞ்சூறினை வனவிலங்கு ஆராய்ச்சியாளர்கள் புகைப்படம் எடுத்தனர்.
- சோனெராட்ஸ் மூஞ்சூறு (டைப்லோமேசோடான் சோனெராட்டி) முதன்முதலில் 1813 ஆம் ஆண்டில் புதுச்சேரிக்கு அருகில் பிரான்சு நாட்டினைச் சேர்ந்த இயற்கை ஆர்வலர் பியர் சோனெராட்டின் என்பவரால் விவரிக்கப்பட்டது.
- இந்த இனம் முதன்முதலாக விவரிக்கப்பட்டதிலிருந்து அதன் எந்த உடல் மாதிரியும் இதுவரை சேகரிக்கப்படவில்லை.
- புகைப்படம் எடுக்கப்பட்ட மூஞ்சூறு, ஆசிய மேட்டு நில மூஞ்சூறு, ஆசிய வீட்டு மூஞ்சூறு, இந்திய மேட்டு நில மூஞ்சூறு மற்றும் கெலார்ட்டின் நீண்ட நகம் கொண்ட மூஞ்சூறு உள்ளிட்ட பிற உள்ளூர் இனங்களிலிருந்து தெளிவான உருவ வேறுபாடுகளைக் காட்டியது.
- ரோம வடிவம் ஆனது பியர் சோனெராட்டின் முதல் விவரிப்புடன் பொருந்துவதாக நிபுணர்கள் உறுதிப்படுத்தினாலும், அதன் மாதிரிகள் சேகரிக்கப்படாததால் அதன் மறு கண்டுபிடிப்பை உறுதிப்படுத்த முடியாது.





## பார்சிலோனா உடன்படிக்கையின் COP24 மாநாடு



- பார்சிலோனா உடன்படிக்கைக்கான 24வது பங்குதாரர்கள் கூட்டம் (COP 24) ஆனது எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Mediterranean Blue Growth: Towards a Resilient and Sustainable Future" என்பதாகும்.
- மத்தியத் தரைக் கடலின் மாசுபாட்டிற்கு எதிரான பாதுகாப்பு உடன்படிக்கை (பார்சிலோனா உடன்படிக்கை) ஆனது 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி 16 ஆம் தேதியன்று பார்சிலோனாவில் ஏற்றுக் கொள்ளப் பட்டு 1978 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## வேளாண்மை மற்றும் உணவுப் பாதுகாப்பில் பேரழிவுகளின் தாக்கம் குறித்த அறிக்கை 2025





- இந்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) வெளியிட்டது.
- 1991 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், தானியங்கள் அதிகம் பாதிக்கப் பட்டதுடன், பேரழிவுகள் 3.26 டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான வேளாண் இழப்புகளை ஏற்படுத்தின.
- பெரிய அளவிலான வேளாண்மை மற்றும் புயல்கள் மற்றும் வெள்ளங்களால் அதிகப் பாதிப்படைதல் காரணமாக உலகளாவிய வேளாண் இழப்புகளில் 47% ஆசியாவில் பதிவானது.
- பேரழிவுகள் ஆனது உலகளாவிய உணவு கிடைக்கும் நிலையை ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 320 கிலோ கலோரிகள் ஆக குறைக்கின்றன.
- கடல் வெப்ப அலைகள் உலகளாவிய மீன்வளத்தில் 15 சதவீதத்தினைப் பாதித்து, 1985 முதல் 2022 ஆம் ஆண்டு வரை 6.6 பில்லியன் அமெரிக்க டாலர் இழப்பை ஏற்படுத்தின.
- இந்திய விவசாயிகள் கோதுமை சாகுபடியில் ஒரு ஹெக்டேருக்கு 29.65 அமெரிக்க டாலர்களைச் சேமித்துள்ளதுடன், தரவுத் தளங்கள், முன் எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் வேளாண் வானிலை ஆலோசனைகள் போன்ற டிஜிட்டல் கருவிகள் இதில் அபாயங்களைக் குறைக்க உதவுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## குழந்தை திருமண ஒழிப்புத் திட்டம்

- ஓராண்டிற்குள் தீவிர குழந்தைத் திருமண ஒழிப்பு இயக்கத்திற்காக தெலுங்கானா 26 அதிக ஆபத்துள்ள மாவட்டங்களைக் குறித்துள்ளது.
- இந்த முன்னெடுப்பு பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் (MWCD) "பால் விவாஹ் முக்த் பாரத்" பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும்.
- 250க்கும் மேற்பட்ட அரசு சாரா நிறுவனங்களின் (NGO) கூட்டணியான ஜஸ்ட் ரைட்ஸ் ஃபார் சில்ட்ரன் (JRC), இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறது.
- தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு V (NFHS-V, 2019–21) ஆனது, தெலுங்கானாவில் 23.5% பெண்கள் 18 வயதுக்கு முன் திருமணம் செய்து கொண்டதாகக் காட்டுகிறது.
- கடந்த ஆண்டில் தெலுங்கானாவில் சுமார் 10,518 குழந்தை திருமணங்களையும், நாடு முழுவதும் 1 லட்சத்திற்கும் அதிகமான குழந்தை திருமணங்களையும் JRC தடுத்தது.
- 100 நாட்கள் அளவிலான இந்தச் செயல் திட்டத்தில் பள்ளிகள், சமய தளங்கள், திருமண சேவை வழங்குநர்கள் மற்றும் உள்ளூர்ச் சமூகங்களில் விழிப்புணர்வு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அடங்கும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## மண்ணின் மைந்தர்கள் விருதுகள் - அசாம் 2025

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் (MoPSW) இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படும் 5வது மண்ணின் மைந்தர்கள் விருதுகள் அசாம் 2025 ஆம் ஆண்டிற்கான விழாவில் மண்ணின் மைந்தர்கள் - வளர்ந்து வரும் சாதனையாளர் விருதை வழங்கினார்.
- ஐந்து இளம் சாதனையாளர்கள் வளர்ந்து வரும் சாதனையாளர் விருதைப் பெற்றனர்:
  - சுக்ரிதா பருவா (ஊடகம் மற்றும் தொடர்பு)
  - சங்கமித்ரா கலிதா (தொழில்முனைவு)
  - இஷாராணி பருவா (விளையாட்டு)
  - ஹிம்ஜோதி தாலுக்தார் (கலை மற்றும் கலாச்சாரம்) மற்றும்

- டாக்டர் தேப்ஜானி போரா (பாதுகாப்பு).

❖ ஐந்து பிரபல நபர்கள் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றனர்:

- அருண் நாத் (கலை மற்றும் கலாச்சாரம்)
- ரவி சங்கர் ரவி (செய்தி மற்றும் ஊடகம்)
- மைனுதீன் அகமது (விளையாட்டு)
- லக்கிமி பருவா (தொழில்முனைவு) மற்றும்
- சிமந்த தாஸ் (பொது சேவை).

❖ சமூகத் துறை மேம்பாட்டு விருது ஆனது டாக்டர் அலகா சர்மா மற்றும் அக்சர் அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது.


❖ 2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மண்ணின் மைந்தர்கள் விருதுகள் ஆனது கேர் லூயிட் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

**Sons of the Soil Awards Assam 2025**

| Award Category | Recipient Name | Field/Domain |
|---|---|---|
| Emerging Achievers Award | Sukrita Baruah | Media and Communication |
| | Sanghamitra Kalita | Entrepreneurship |
| | Isharani Baruah | Sports |
| | Himjyoti Talukdar | Art and Culture |
| | Dr. Debjani Borah | Conservation |
| Lifetime Achievement Award | Arun Nath | Art and Culture |
| | Ravi Shankar Ravi | News and Media |
| | Mainuddin Ahmed | Sports |
| | Lakhimi Baruah | Entrepreneurship |
| | Simanta Das | Public Service |
| Social Sector Development Award | Dr. Alaka Sarma | Social Sector Development |
| | Akshar Foundation | Social Sector Development |

Presented by Union Minister of MoPSW. Organised by Care Luit (Instituted in 2016).

## உலக சாதனைப் புத்தகம் - நிதீஷ் குமார்



- பத்து முறை பதவியேற்ற முதல் இந்திய முதல்வர் என்ற பெருமையை நிதீஷ் குமார் பெற்றுள்ளார்.
- இந்தச் சாதனைக்காக வேண்டி இலண்டனில் உள்ள உலக சாதனைப் புத்தக அமைப்பு அவரைக் கௌரவித்தது.
- முதன்முதலில் 2000 ஆம் ஆண்டில் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அவர், 2005 ஆம் ஆண்டு முதல் பெரும்பாலும் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.
- 2025 ஆம் ஆண்டு தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அவர் 10வது முறையாக முதல்வராகப் பதவியேற்றார்.

### EARTH உச்சி மாநாடு 2025





- EARTH (வேளாண்மை, கிராமப்புற மாற்றம் மற்றும் முழுமையான அதிகாரமளிப்பு) உச்சி மாநாடு 2025 ஆனது குஜராத்தின் காந்திநகரில் நடைபெற்றது.
- 'சஹகர் சாரதி' முன்னெடுப்பின் கீழ் சுமார் 13க்கும் மேற்பட்ட சேவைகள் மற்றும் தயாரிப்புகள் தொடங்கப்பட்டன.
- அவற்றில் டிஜி KCC (டிஜிட்டல் கிசான் கடன் அட்டைகள்), பிரச்சார சாரதி, வலைதள சாரதி, கூட்டுறவு ஆளுகைக் குறியீடு, ePACS (மின்னணு முதன்மை வேளாண் கடன் சங்கங்கள்), உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புச் செயலி, சிக்சா சாரதி மற்றும் சாரதி தொழில்நுட்ப மன்றம் ஆகியவை அடங்கும்.
- கிராமப்புறப் பொருளாதாரம் மற்றும் மேம்பாட்டுத் தீர்வுகளை மையமாகக் கொண்ட மூன்று தொடர்களில் இந்த உச்சி மாநாடு இரண்டாவது ஆகும்.
- 2026 ஆம் ஆண்டில் டெல்லியில் நடைபெற உள்ள மூன்றாவது கூட்டத்தில் ஒரு கொள்கை கட்டமைப்பு முடிவு செய்யப்படும்.
- இந்த முன்னெடுப்பு ஆனது இந்தியாவில் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் கூட்டுறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## முக்கிய தினங்கள்


### ஆயுதப்படைகளின் கொடி தினம் 2025 - டிசம்பர் 07

- இந்த நாள் நாட்டின் துணிச்சலான இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை வீரர்களின் சேவைகள் மற்றும் தியாகங்களை கௌரவிக்கிறது.
- கொடி நாள் ஆனது 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 07 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- 1993 ஆம் ஆண்டில், இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம் ஆனது இது தொடர்புடைய நல நிதிகளை ஓர் ஆயுதப்படை கொடி நாள் நிதியாக ஒருங்கிணைத்தது.




# இதரச் செய்திகள்

## மகாபரிநிர்வான் திவாஸ் 2025




- டாக்டர் அம்பேத்கரின் நினைவு தினத்தை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 06 ஆம் தேதியன்று இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- மகாபரிநிர்வான் என்ற சொல்லிற்கு புத்தத் தத்துவத்தில் "வீடுபேறு/முக்தி" என்று பொருள் ஆகும்.
- அம்பேத்கர் 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் தேதியன்று புத்த மதத்தைத் தழுவினார்.
- அவர் வட்டமேசை மாநாடுகளில் (1930–1932) முக்கியப் பங்கு வகித்தார் என்பதோடு மேலும் பூனா ஒப்பந்தத்தில் (1932) அவர் கையெழுத்திட்டார்.
- அவர் இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராக பணியாற்றினார் மற்றும் இந்திய அரசியலமைப்பின் வரைவுக் குழுவின் தலைவராக இருந்தார்.
- 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் தேதியன்று புத்த மதத்திற்கு மாறிய அவர் 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 06 ஆம் தேதியன்று காலமானார்.
- அவருக்கு 1990 ஆம் ஆண்டில் (மறைவிற்குப் பிந்தைய) பாரத ரத்னா (இந்தியாவின் மிக உயரிய குடிமை விருது) வழங்கப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★